# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.9** |
| Name | : | **ராஜம்மாள்** |
| Father's / Husband Name | : | நடராஜ் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 60/2025 |

**தேதி : 05.03.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி வசந்தியை எனக்கு தெரியும். எதிரி எனக்கு ஏற்கெனவே இரண்டு தடவை லோன் வாங்கி கொடுத்துள்ளார். பிறகு எதிரி என்னிடம் அவரது மாமனாரின் மருத்துவ செலவிற்காக லோன் வாங்கி தருமாறு கேட்டார். அதனால் துறையூரில் உள்ள முத்துட் பைனான்ஸில் இருந்து ரூ.65,000/- வாங்கி கொடுத்தேன். காரையிலுள்ள நிதி நிறுவனத்திலிருந்து ரூ.55,000/- வாங்கி கொடுத்தேன். மேற்படி கடன் பெற்றதற்கான ஆவணங்கள் அனைத்தும் எதிரியிடம்தான் உள்ளது. என்னிடம் எந்த ஆவணமும் இல்லை. கடன் தொகையில் ஒரே ஒரு தவணை மட்டும் எதிரி திரும்ப செலுத்தினார். மீதி தவணைகள் செலுத்தாததால் நிதி நிறுவன ஊழியர்கள் எனது வீட்டிற்கு வந்து விசாரித்தபோதுதான் எதிரி தவணை செலுத்தாமல் தலைமறைவாகிவிட்டார் என்று தெரியவந்தது.

பிறகு இதுசம்மந்தமாக பாடாலூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றபோது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்று புகார் கொடுக்குமாறு சொன்னார்கள். சத்தியா என்பவர் புகார் அளித்தார். மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எதிரியையும், அவரது கணவரையும் போலீஸார் அழைத்து வந்து விசாரித்தார்கள். அப்போது வசந்தி லோன் வாங்கியதை ஒப்புக்கொண்டார். திருப்பி செலுத்திவிடுவதாக சொன்னார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வசந்தி எனக்கு உறவினர் இல்லை. பக்கத்து வீட்டுக்காரர். எதிரி ஏற்கெனவே எனக்கு இரண்டு லோனை வாங்கி கொடுத்து அதை நானும், அவரும் பாதியாக பிரித்துகொண்டு ஆளுக்கு பாதி கடன் தொகையை திருப்பி செலுத்திவிட்டோம். முதலில் ஒரு லோன் வாங்கி ஆளுக்கு பாதியாக எடுத்துக்கொள்ளலாம் என்று எதிரி சொன்னார். லோன் வாங்கிய பிறகு பாதி தொகையை எனக்கு தரவில்லை. ரூ.65,000/- லோன் தொகையில் நான் பாதி, எதிரி பாதியாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. அதன்பிறகு வாங்கிய லோன் தொகையில் ரூ.40,000/- தான் எதிரி தரவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி இரண்டு லோனையும் சேர்த்து எனக்கு ரூ.70,000/- தான் தரவேண்டும் என்றால் சரியல்ல. எதிரி என்பேரில் வாங்கிய லோன் தொகைகளை எதிரி கட்டுவதற்கு சம்மதம் என்றால் சம்மதம். எதிரி என்னை திட்டமிட்டு ஏமாற்றவில்லை என்றாலும், அவருடைய நெருக்கடி காரணமாக செலுத்த முடியவில்லை என்றாலும் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.